**கொடபொல பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 25 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கொடபொல பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது ரூபா 236,500 பெறுமதியான இயந்திரங்கள், பொறியும் பொறித்தொகுதியின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது காணிக் கட்டிடங்களின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,239,513 இற்கான செலவுகளை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |
| (iii) | மீளாய்வாண்டின் போது நேர்வேலை அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலைகளுக்கான செலவுகள் ரூபா 108,500 தொகை, மூலதன செலவுகளின் கீழ் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் ரூபா 293,835 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக வருமானத்தை கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய் வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |
| (v) | மீளாய்வாண்டின் போது உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கடன் தொகைக்கான தவணைப் பணமாக செலுத்தப் பட்டிருந்த ரூபா 230,347 தொகை வருமானச் செலவுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | கடன் தவணை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய் வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |
| (vi) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 1,308,444 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய் வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளின் படி காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 84,029,280 தொகை ஆகும். | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்கள் இணக்கஞ் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நெடுங்காலமாக காணப்படும் சமமின்மை ஆதலால் எதிர்கால த்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

(இ) **தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டுகள் முதல் நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 255,674 தொகைக்கான தொங்கல் கணக்கின் மீதியை இனங்கண்டு உரிய சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக கண்டறிந்த கணக்குகளில் தேவையான சீராக்கல் மேற் கொண்டு தொங் கல் கணக்கு தீர்க்கப்பட வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் மீதி ஒன்று என்பதினால் எதிர்காலத்தில் சரிசெய்வத ற்கு நடவடிக்கை எடுப்னே் என அறிவிக்கின்றேன். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 86,517,132 தொகைக்கான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

## 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவுகளுடன் செலவு விடயங்களின் உண்மையான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்குகளுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் மிகைகள் மற்றும் பற்றாக் குறைகளுக்காக காரணங்கள் காட்டும் கூற்றொன்று கணக்குகளுடன் சமர்ப்பிப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக் கணித்துள்ள நபர்கள் தொடர் பான அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) விதி 218 | சபைக்குச் சொந்தமான அனைத்துக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணிப்பீடு ஒன்று பேணப்பட்டி ருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,570,380 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,701,806 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 6,192,000 | 3,133,963 | 3,059,826 | 949,081 | 1,477,000 | 1,373,838 | 1,362,574 | 874,944 |
| வாடகை | 4,189,500 | 6,164,927 | 4,159,542 | 2,162,195 | 6,998,000 | 5,007,233 | 5,306,819 | 156,810 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,003,000 | 913,956 | 913,956 | - | 928,000 | 1,666,499 | 1,666,499 | - |
| ஏனைய வருமானங்கள் | 21,877,000 | 21,285,087 | 27,986,847 | 17,902,422 | 19,014,200 | 20,743,816 | 14,314,710 | 24,604,182 |
| மொத்தம் | 33,261,500 | 31,497,933 | 36,120,171 | 21,013,698 | 28,417,200 | 28,791,386 | 22,650,602 | 25,635,936 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 33,261,500 தொகையாகும். மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 25,635,936 இற்கான நிலுவைத் தொகை மற்றும் சிட்டையிடல் ரூபா 31,497,933 தொகை உடன் ரூபா 57,133,869 அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 36,120,171 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 21,013,698 ஆகும். அறவீடுகளின் முன்னேற்றம் 63 சதவீதமாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) **வீதவரி** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 161,909 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 155,560 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 317,469 தொகை அறவிடப் பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 142,765 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 174,704 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

(ஆ) **ஏக்கர் வரி**

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ரூபா 209,615 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 48,582 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 258,197 தொகை அறவிடப் பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 44,587 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 213,610 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. அறவீடு களின் முன்னேற்றம் நூற்றிற்கு 17 சதவீதமாகிய குறைந்த பெறுமதி யாக இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| **சந்தை மீன் பலகை வாடகை** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 108,435 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 4,338,253 தொகையான ஆண்டிற்கான சிட்டையிட லுடன் ரூபா 4,446,688 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 2,557,713 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,888,975 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்காக வழக்குத் தாக்கல் செய்வதற்கு ஆரம்ப அலுவல்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. |

### 2.2.5 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) நீர்க் கட்டணம்** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 2,046,149 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 3,794,433 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 5,840,582 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 3,646,942 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 2,193,640 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை கட்டணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 400,208 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 15,308,574 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை கட்டணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபையினால் திண்மக் கழிவுப் பொருள் 1,300,000 கிலோகிராம் அளவு சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் உக்கக் கூடிய குப்பை 520,000 கிலோகிராம்கள் உர உற்பத்திக்காக பயன்படுத்தப் பட்டுள்ளது. மீதியான கழிவுப் பொருட்களை முறையற்ற விதமாக விடுவிக்கப்பட்டிந்தது. | உக்காத குப்பை மீள்சுழற்சி செய்யப்பட வேண்டும்.. | பொலித்தீன் நொருக்கும் இயந்திரம் சபையில் காணப்படவில்லை. |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 10 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 03 மிகை பதவியணியினை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியின் மிகை பதவிகளை முறைப் படுத்துவதும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் வேண்டியுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) **ஊழியர் கடன்** | | |
| ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் தவணைப் பணம் செலுத்துவதற்கு புறக்கணித்திருந்த 10 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 33,770 தொகையாகிய நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடடிவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைக் கடன் அறவீடு செய்யப்பட வேண்டும். | நிதி அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2005 ஆண்டின் பின்னர் ஆதனங்களுக்காக பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்படாமையால் 2005 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 13 வருட காலப் பகுதியில் ஏற்பட்டிருந்த புதிய நிர்மாண வேலைகளை போலவே புதிய பெறுமதி மதிப்பீடு பெறுமதியின் படி வீதவரி அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் கடைசி கட்டத்தில் இருப்பதனால் விரைவாக புதிய பெறுமதி மதிப்பீட்டின் படி கட்டணம் அறவீடு செய்வேன். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான கப் வண்டி ஒன்று திருத்த வேலைக்காக 2018 ஜூலை 16 ஆம் திகதி தனியார் நிறுவனம் ஒன்றில் சாட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு அக்தோபர் 15 திகதிக்கு முன்னர் திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டு சபைக்கு ஒப்படைக்க வேண்டும் என உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் 2019 மார்ச் 08 திகதி வரையும் திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டு சபைக்கு ஒப்படைத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட கருமம் உடன் படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | விரைவாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2017 ஆகஸ்ட் 23 திகதி உள்ளூராட்சி ஆணையாளரின் 01/06/06/02 இலக்கங் கொண்ட கடிதத்தின் மூலம் வெளிக்கள வேலை தொழிலாளர் பதவியின் நிரந்தர ஊழியர்கள் விடுமுறை பெற்ற சந்தர்ப்பங்களில் மற்றும் அவசர இடர் நிலைமை காணப்படும் காலங்களில் மாத்திரம் குறிப்பிட்ட கருமங்களை நிறைவேற்றுவதற்காக 06 ஊழியர்கள் வெளிக்கள வேலை தொழிலாளர் பதவியின் கீழ் நாளாந்த சம்பள அடிப்படையில் பதிவு செய்து சேவையில் ஈடுபடுத்துவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு இணங்காமல் மீளாய்வாண்டின் போது வெளிக்கள வேலை தொழிலாளர்கள் 06 பேர் 1344½ நாட்கள் சேவையில் ஈடுபடுத்தியமையால் ரூபா 1,369,265 தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. | கடிதத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வெளிவேலை தொழிலாளர்கள் விடுமுறை பெறும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் அல்லாமல் சுகாதார தொழிலாளர்கள் விடுமுறை பெறும் சந்தர்ப்பங்களிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சபையினால் பல்வேறு நிதியங்களின் கீழ் 07 பாதைகளுக்கு அச்சுக் கற்கள் பரப்புவதற்காக தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகரித்திருந்த விலையை விட ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 205 வீதம் 956.52 சதுர மீற்றருக்கு ரூபா 196,086 தொகை மிகையாகச் செலுத்தப் பட்டிருந்தது. | கடிதத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | மிகையாக செலுத்திய தொகை பிடிபணத்தில் இருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | 2017 நவம்பர் 30 திகதிய 2048 ஆம் இலக்க வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் விளம்பரப் பலகைகள் காட்சிப் படுத்தல் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், 2019 மார்ச் 07 ஆம் திகதி வெளிக்கள பரிசோதனையின் போது பொருத்தப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்த 52 அறிவித்தல் பலகைகள் தொடர்பாக ரூபா 112,600 இற்கான கட்டணம் ஒன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இந்த பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.4 பெறுகை**

**3.4.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்காததுடன் ஆண்டின் போது கொள்வனவு செய்வதற்காக ரூபா 7,349,182 தொகை செலவு மேற்கொள்ளப் பட்டிருந்தது. | வருடாந்த பெறுகை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பெறுகைத் திட்டம் தயாரிப்பேன். |

## 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் சபை நிதியம் மற்றும் பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் ரூபா 27,000,000 தொகைக்கான 54 வேலைத் திட்டங்கள் செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், 2018 வருட இறுதி வரை அவற்றில் ரூபா 21,500,000 பெறுமதியான 43 வேலைத் திட்டங்கள் செயற்படுத்தியிருக்கவில்லை. | பாதீட்டின் பிரகாரம் செயற்படுத்துவதற்கு திட்டங்கள் தயாரிக்கப் பட வேண்டும். | 43 நிர்மாண வேலைகளில் 40 தொடர் வேலையாகியுள்ளது. |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 செலவு விடயங்களில் சேமிப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 9,663,963 தொகையாகக் காணப்பட்டதுடன் அப்பெறுமதிகள் 04 சதவீதம் முதல் 86 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | பாதீட்டை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 03 வருமான விடயங்களை நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 10,308,195 தொகையாக இருந்ததுடன், அவை 08 முதல் 49 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | பாதீட்டை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |